பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

30 03 2025 **SUNDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.
2. தமிழ் - இந்தி மொழிகளுக்கு இடையே எந்த போட்டியும் இல்லை என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.
3. சிறுபான்மையினர் நலனை பாதுகாக்க மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
4. நீட் தேர்வு விவகாரத்தில் தமிழகத்தை ஆளும் திமுக அரசு மாணவர்களை ஏமாற்றி வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.
5. ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - ஸ்பெயினின் **David Vega Hernandez** இணை பட்டம் வென்றது.

இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்தியா வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

இது இரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்பட உள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>

தமிழ் - இந்தி மொழிகளுக்கு இடையே எந்த போட்டியும் இல்லை என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

பிஜேபி மகளிர் அணி சார்பில், புதுதில்லியில், ராணி வேலுநாச்சியாரின் வீரத்தை போற்றும் நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்திய சுதந்திரப்போராட்டத்தில் ராணி வேலுநாச்சியாரின் பங்களிப்பு ஒரு பொற்காலம் என்றார்.
பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, பெண்களின் திறமை மீது முழு நம்பிக்கை வைத்திருப்பதாக கூறிய அவர், பெண்களுக்கு அதிகாரம் அளிக்க பிஜேபி உறுதிபூண்டுள்ளதாகவும் கூறினார்.
இந்தி மொழிக்கும், தமிழ் மொழிக்கும் இடையே சர்ச்சையை ஏற்படுத்த சிலர் முயற்சிப்பதாக கூறிய அவர், இந்திய மொழிகளுக்கு இடையே இதுபோன்ற எந்த சர்ச்சையும் இல்லை என்றும், மாறாக, அனைத்து மொழிகளுக்கு இடையே ஒற்றுமை நிலவுவதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

பிஜேபி மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி சீனிவாசன், தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா உள்ளிட்டோர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>

நாட்டில் சூரியசக்தி மின்உற்பத்தி திறன் கடந்த பத்தாண்டுகளில் மூவாயிரத்து 580 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

அகமதாபாதில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், 2030-ஆம் ஆண்டுக்குள் சூரியசக்தி மின்சாதன உற்பத்தி 150 ஜிகாவாட் அளவிற்கு அதிகரிக்கப்படும் என்றார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் உலக அளவில் இந்தியாவின் நிபுணத்துவம் அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் இந்தியா ஏற்படுத்தியுள்ள சர்வதேச சூரியசக்தி கூட்டணி, உலக அளவில் சூரியசக்தி மின்உற்பத்தியை விரைவுப்படுத்தும் என்றும் திரு பிரல்ஹாத் ஜோஷி நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<>>>>>

சிறுபான்மையினர் நலனை பாதுகாக்க மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை கொளத்தூரில் நடைபெற்ற ரமலான் நிகழ்ச்சியில் பேசிய அவர், இஸ்லாமியர்களின் நலனை பாதுகாக்கும் இயக்கமாக திமுக இருக்கும் என்றார்.

கல்வி வளர்ச்சி, இடஒதுக்கீடு மூலமாக இஸ்லாமியர்களுக்கு சமூக நீதி கிடைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் திமுக அரசு மேற்கொண்டு வருவதாகவும் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

கல்லூரிகளில் ராக்கிங்-கை தடுக்க சிறப்புக்குழு அமைத்து, கண்காணிக்கப்படுவதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாணவர்கள் கல்லூரிக்கு வருவது முதல், வீடு திரும்பும் வரை கண்காணிக்கப்படுவதாக தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - கோவி செழியன் - 42 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

நீட் தேர்வு விவகாரத்தில் தமிழகத்தை ஆளும் திமுக அரசு மாணவர்களை ஏமாற்றி வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நீட் தேர்வு அச்சத்தால் சென்னையில் மாணவி ஒருவர் உயிரிழந்திருப்பது அதிர்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தில் நீட் தேர்வே இருக்காது என்று பொய்யான வாக்குறுதியை அளித்து ஆட்சிக்கு வந்த திமுக, இத்தேர்வை ரத்து செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<<<>>>>>

தெலுங்கு மற்றும் கன்னட புத்தாண்டு தினமான யுகாதி இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>

தருமபுரி மாவட்டத்தில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருவதாக ஆட்சியர் திரு சதீஷ் தெரிவித்துள்ளார்.

அதியமான்கோட்டையில் நடைபெற்ற சிறப்பு கிராமசபை கூட்டத்தில் பேசிய அவர், பொதுமக்கள் தங்கள் இல்லங்களில் சேரும் குப்பைகளை மக்கும் குப்பை – மக்காத குப்பை என தரம் பிரித்து தூய்மைப்பணியாளர்களிடம் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

*(வாய்ஸ் பைட் - சதீஷ் - 45 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

இருவரிச் செய்திகள்

நைஜீரியாவில் ராணுவத்துக்கும், ஷித்தே அமைப்பினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில், பாதுகாப்புப்படை வீரர் ஒருவர் உட்பட ஆறு பேர் உயிரிழந்தனர்.

----------------

அமெரிக்காவின் வாஷிங்டனில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் இரண்டு பேர் உயிரிழந்தனர், 4 பேர் காயமடைந்தனர்.

---------------

மும்பை தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த காவல் உதவி ஆய்வாளர் துக்காராம் நினைவாக அவரது சொந்த கிராமமான கெடாம்பியில் நினைவுச்சின்னம் அமைக்கப்படும் என மகாராஷ்ட்ரா அரசு தெரிவித்துள்ளது.

----------------------

சென்னை ராயப்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரமலான் பண்டிகையை முன்னிட்டு, இஸ்லாமியர்களுக்கு துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

-------------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய கட்டிடத்திற்கு மாநில அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா அடிக்கல் நாட்டினார்.

--------------

மதுரையில் கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநில அமைச்சர்கள் திரு சி வி கணேசன், திரு மூர்த்தி, திரு பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

---------------

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில், கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் நடைபெற்ற கலைச்சங்கமம் விழாவில், ஆட்சியர் திரு பிரசாந்த் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

-----------------

பெண்களின் ரயில் பயணம் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்யும் வகையில், உதகை ரயில்வே காவல்துறை சார்பில் பெண் பயணியர் பாதுகாப்புக்குழுவை கோவை ரயில்வே காவல்துறை ஆய்வாளர் மீனாட்சி தொடங்கிவைத்தார்.

-----------------

நாகப்பட்டினத்தில் மாவட்ட நீதித்துறை சார்பில் நடைபெற்ற பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திருமதி அனிதா சுமந்த் கலந்துகொண்டார்.

--------------------

இந்திய தர நிர்ணய அமைவனத்தின் மதுரை கிளை சார்பில், குடிநீர் தயாரிப்பு தரக்கட்டுப்பாடு பணியாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி வகுப்பு தஞ்சாவூரில் நேற்று நடைபெற்றது.

<<<<<<>>>>>

விளையாட்டுச் செய்திகள்

ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - ஸ்பெயினின் **David Vega Hernandez** இணை பட்டம் வென்றது.
ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் பிரான்சின் **Gregoire Jacq -** பிரேசிலின் **Orlando Luz** இணையை வென்றது.

------------------

சென்னையில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனவ் தாக்கர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-----------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணிக்கு எதிரான ஆட்டத்தில் 36 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணி வெற்றிபெற்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் தில்லி – ஹைதராபாத் அணியையும், ராஜஸ்தான் - சென்னை அணியையும் எதிர்கொள்கின்றன.

-----------

இந்தியா லெஜன்ட்ஸ் - பிரேசில் லெஜன்ட்ஸ் அணிகளுக்கு இடையேயான கால்பந்து காட்சிப் போட்டி சென்னையில் இன்று நடைபெறுகிறது.

இப்போட்டி சென்னை நேரு விளையாட்டு அரங்கில் இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

<<<<<<END>>>>>